1972 டிசம்பர் 15] [டாக்டர் மு. கருணாநிதி]

இன்றே, முன்கூட்டியே, தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையின் காரணமாகத்தான் திரு. ஹாண்டே அவர்கள் இதைக் கிளப்பியிருக்கிறார்கள். எங்கள் மீது அவ்வளவு அன்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் அறியாமல் இல்லை. இதற்காக, நாங்கள் யாருமில்லாது, ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு ஏறத்தாழ 6, 7 மாதங்களுக்கு முன்பு, இப்பொழுது அல்ல, அப்பொழுதே (குறுக்கீடு) அக்டோபருக்கு முன்பே அமைக்கப்பட்டு, அந்த குழு "நம்நாடு" இதழைத் தொடர்ந்து நடத்த முடியுமா என்கின்ற அந்தப் பிரச்சினையை மிக ஆழமாக ஆராய்ந்தது. மாதம் ஒன்றுக்கு ரூ. 3,000, ரூ. 4,000 நஷ்டத்தில் அந்தப் பத்திரிகையை நடத்த வேண்டிய அவசியம் இல்லை யென்ற காரணத்தினாலும், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 30,000, ரூ. 40,000 நஷ்டத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத காரணத்தினாலும், இது நிறுத்தப்படுவதைத் தவிர வேறு வழியில்லை யென்று திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுவிற்கும், பொதுக்குழுவிற்கும் பரிந்துரை செய்தது. அதைப்பற்றி முடிவு செய்ய, தலைவருக்கும், பொதுச் செயலாளருக்கும் செயற்குழு தங்களுடைய அதிகாரத்தை வழங்கியிருக்கிறது. அதை ஒட்டித்தான் நிர்வாகிகள் அந்த நடவடிக்கையை எடுத்தார்கள். இதனால் தொழிலாளிகள் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் அரசாங்கம் நிச்சயம் பார்த்துக் கொள்ளும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, இவ்வளவு தூரம் விவாதித்த பிறகு இந்த அவையை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய தேவையில்லை யென்று தலைவர் அவர்களே, தங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், முதலமைச்சர் ஆகியோர் தந்த விளக்கங்களுக்குப் பிறகு, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லையென்று கருதி, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) அரசினர் தீர்மானம்

(அ) விதி 41(3)ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; சட்டப் பேரவையின் விதிகளின் 244-வது விதியின்கீழ் "பேரவையின் 41-வது விதி பிரிவு (3)-ன்படி ஒரே கூட்டத்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 டிசம்பர் 15

தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(4) கவன ஈர்ப்பு

(அ) திராவிட முன்னேற்றக் கழக முன்னணி உறுப்பினர்களின் கடைகள் சூறையாடப்பட்டதன் காரணமாக திருச்சிராப்பள்ளி நகருக்குள்ளும் வெளியிலும் நிலவும் பதட்டநிலை குறித்து.

THIRU V. M. ABDUL JABBAR: Sir, I wish to call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, namely, the tension prevailing in and around Tiruchirappalli Town subsequent to the looting of the shops belonging to leading members of D.M.K.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 11—12—72 அன்று திருச்சியில் மாணவர்களுடைய ஊர்வலமும், அர்த்தாலும் நடைபெற்று மாணவர்கள் கூட்டம் பிற்பகல் சுமார் 1-30 மணிக்கு முடிந்த பின்பு சில வன்முறைச் செயல்கள் நிகழ்ந்துள்ளன. பிற்பகல் சுமார் 2 மணிக்கு சுமார் 50 பேர் கொண்ட கூட்ட மொன்று இஸ்மாயில் பார்க்கில் இருந்து புறப்பட்டு மெயின் கார்ட் கேட் அருகிலுள்ள போக்குவரத்து மரக்குடைக்கு பெட்ரோல் ஊற்றித் தீயிட்டனர்.

பிறகு அந்தக் கூட்டம் திருச்சி நகர 29-வது வட்ட தி.மு.க. கிளைச் செயலாளர் திரு. பி. எல். எஸ். சிங்காரம் அவர்களுக்கு உரிமையான "அன்பு லாட்ஜ்" என்ற கட்டடத்தைத் தாக்கினர். அந்தக் கட்டடம் பூட்டப்பட்டிருந்தாலும் கூட அதன் கதவுகள் இடைவெளி கொண்ட கதவாக (கொலாப்ஸிபில் கேட்டாக) இருந்த காரணத்தால் அந்தக் கதவுகளின் மூலமாக கற்களை எறிந்து கண்ணாடி சன்னல்களையும், படங்களையும், சேதப்படுத்தினர். இந்தத் தாக்குதலின் விளைவாகச் சுமார் ஓர் ஆயிரத்திற்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.